தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

## திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,
## மாநிலத் தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்கள். SA 10664/D/2019 & SA 45/D/2020**

திரு. K. ஆறுமுகசாமி --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1. பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
முதன்மைக்கல்வி அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம்.

--- பொது அதிகார அமைப்புகள்

2. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி, ஆனைமலை,
கோயம்புத்தூர் மாவட்டம்.

பார்வை:

| | SA 10664/D/2019 | SA 45/D/2020 |
|---|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 14.09.2019 | 26.10.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | --- | 09.11.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 11.10.2019 | 19.11.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.10.2019 | 02.12.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 21.10.2019 | 30.12.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர்கள் திரு. பாலன், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், முதன்மைக்கல்வி அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம் மற்றும் திருமதி.

சி.வசந்தா, தலைமையாசிரியர், ஆனைமலை, கோயம்புத்தூர் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கோயமுத்தூர் மாவட்டம் முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் ஆனைமலை அரசு மேல்நிலைப்பள்ளி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள மனுக்களில், கோயம்புத்தூர் முதன்மைக்கல்வி அலுவலரால் வழங்கப்பட்ட ந.க.எண்.3151/ஆ1/2009 நாள் 10.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் முழு விவரம், அடிப்படை விதி 54(b) எந்த ஆண்டு நடைமுறைக்கு வந்தது என்பது பற்றிய முழு விவரம் மற்றும் அவற்றின் நகல், சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய W.P.No.24504/2014-ன் என்ற தீர்ப்பின்படி குடிமையியல் பணியாளர் அடிப்படை விதிப்படி தற்காலிக பணிநீக்க காலம் முறைப்படுத்தலாம் என உள்ளது, அது முறையற்ற தீர்ப்பு என்று முதன்மைக்கல்வி அலுவலகம் கருதுகிறதா என்ற விவரம் மற்றும் கோயம்புத்தூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ஓ.மு.எண்.12958/ஆ1/2019 நாள் 11.10.2019 தேதியிட்ட கடிதத்தின் விவரங்கள் தொடர்பாகவும், முதன்மைக்கல்வி அலுவலரால் வழங்கப்பட்ட ந.க.எண்.3151/ஆ1/2009 நாள் 10.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் முழு விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் ஒரே பொருள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(1)-ன் கீழ் தனித்தனியே தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தமது இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை மேற்குறிப்பிட்டவாறு தனித்தனியே இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் இன்று (04.11.2020) ஒருசேர தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மீது குற்றவழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும், அவர் பணியில் இல்லாத காலத்தை பணிக்காலமாக கருதி, பணப்பலன்களை பெற்று வழங்கக் கோரியதாகவும், இது சம்பந்தமாக அனைத்து பணப்பலன்களை மனுதாரருக்கு வழங்கப்பட்டதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரின் விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானவை என்று முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண்கள். **SA 10664/D/2019 & SA 45/D/2020**</u>

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்புகள்:-</u>**

1. பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
முதன்மைக்கல்வி அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம்.

**வழக்கு எண்கள். SA 10664/D/2019 & SA 45/D/2020**

2. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி, ஆனைமலை,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**மனுதாரர்:-**

திரு. K. ஆறுமுகசாமி,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆனைமலை,
பொள்ளாச்சி வட்டம், கோவை மாவட்டம்.

Copy to: SA 10664/D/2019 & SA 45/D/2020
SNPA 06.11.2020